Message from Mary (TAMIL)

மரியன்னையின் அருட்செய்தி

"ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைத்து
எனது மனம் பேருவகை கொள்கின்றது!"

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

மரியன்னையின் அருட்செய்தி

இந்தக் கடைசி நாட்களில் கடவுள் தமது தூயாவியானவர் மூலம் தமது மக்களை அற்புதமான விதங்களில் சந்தித்து வருகிறார். தலையானவராகிய கிறிஸ்துவிடமிருந்து ஒவ்வொரு திருச்சபையும் அதற்குத் தேவையான செய்தியைப் பெற்று வருகிறது (திருவெளிப்பாடு 2 & 3). ரோமன் கத்தோலிக்க மார்க்கமே கிறிஸ்தவத்தில் தனித்த மிகப் பெரிய பிரிவாகும். அகிலவுலகிலுமுள்ள ரோமன் கத்தோலிக்கர் நடுவில் நடக்கும் தூயாவியானவாது அற்புத அசைவாட்டம் மறுக்க முடியாதது. இறைவன் பாரபட்சம் இல்லாதவர் அல்லவா? "எல்லா இனத் தவரிலும் அவருக்கு அஞ்சி நடந்து நேர்மையாய்ச் செயல் படுபவரே அவருக்கு ஏற்புடையவர்" என்றார் திருத்தூதர் பேதுரு (திருத்தூதர் பணிகள் 10:34,35). ஆனால் ஆன்மீக மீட்பின் செய்தி தெளிவாயிராவிடில் மக்கள் ஏமாந்துபோவர். நாம் அனைவரும் உயிர்த்தெழவிருக்கும் நாளில் எவருக்கும் எதிர்பாராத அதிர்ச்சி உண்டாகக்கூடாது. இதற்காகவே இக்கட்டுரை. மரியன்னையின் வார்த்தைகள் மற்றும் அவாது அனுபவங்களிலிருந்தே மீட்பு (Salvation) மற்றும் கிறிஸ்தவ வாழ்வுக்குரிய ஐந்து படிப்பினைகளை இங்கு எழுதியுள்ளேன். கீழ்வரும் பத்திகளை மிகவும் கவனமாய், திறந்த மனதுடன், வாசிக்கும்படி என் அருமை ரோமன் கத்தோலிக்க நண்பர் ஒவ்வொருவரையும் அன்பாய் வருந்திக் கேட்கிறேன்.

1. இலவசமான மீட்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

''என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது'' என்று மரியன்னை பாடினார்கள் (லூக் 1:47). அவர்கள் தன்னையும் ஒரு ''பாவி'' (sinner) என்று ஒத்துக்கொண் டதினால்தானே கடவுளைத் தனது ''மீட்பர்'' (Saviour) என்று அழைத்தார்கள்? நோயாளிக்குத்தானே மருத்துவர் தேவை? பாவிகளுக்குத்தான் மீட்பர் தேவை. ''எல்லாருமே பாவம் செய்து கடவுள் கொடுத்த மேன்மையை இழந்துபோயினர்'' என்று திருவிவிலியம் (Bible) சொல்லுகிறது (உரோமையர் 3:23). ''எல்லாரும்'' என்ற சொல் இயேசுவானவரைத் தவிர, மரியன்னை, யோசேப்பு உட்பட யாவரையும் உள்ளடக்கியுள்ளது.

நமது மார்க்கச் சடங்குகளினாலோ, சமூகநலத் தொண்டுகளினாலோ நாம் ஆன்மீக மீட்பைச் சம்பாதித்துவிட முடியாது. இச்சத்தியத்தை ரோமன் கத்தோலிக்க நண்பரும் புராட்டஸ்டன்ட் நண்பரும் தெளிவாய்ப் புரிந்துகொள்ளவேண்டும். ''நமது நேரிய செயல்கள் எல்லாம் அழுக்கடைந்த ஆடைபோல் ஆயின'' என்று திருமறையில் வாசிக்கிறோம் (எசாயா 64:6). சவுல் என்பவர் ஒரு மதவாதி. அவர் பிறந்த எட்டாம் நாள் விருத்த சேதனம் பெற்றவர்; இஸ்ரயேல் இனத்தவர்; பென்யமின் குலத்தவர்; எபிரேயப் பெற்றோருக்குப் பிறந்த எபிரேயர்; திருச்சட்டத்தைக் கடைப்பிடிப்பதில் குற்றமற்ற பரிசேயன் (பிலிப்பியர் 3:4-7). ஆனால் தனக்கு ஆதாயமாயிருந்த இவை அனைத்தையும் கிறிஸ்துவின் பொருட்டு இழப்பு எனக் கருதினார். நீங்களும் கிறிஸ்தவப் பெற்றோருக்குப் பிறந்திருக்கலாம்; உங்கள் திருச்சபையிலேயே திருமுழுக்கு பெற்றிருக்கலாம்; திருச்சபையின் மரபுகள் மற்றும் ஒழுங்குகள் எல்லாவற்றின்படியும் நடந்து, நேர்மையாய் வாழ முயன்று வரலாம். இவற்றையும், இன்னும் இது போன்று ஆயிரம் நற்செயல்கள் செய்தாலும் அதினால் உங்களுக்கு மீட்பு கிடைத்துவிடாது. ''மீட்பு என்பது உங்கள்

செயல் அல்ல; மாறாக இது கடவுளின் கொடை'' என்று திருவிவிலியம் தெளிவுபடுத்துகின்றது (எபேசியர் 2:8,9). மீட்பு என்பது கடவுளைப் பொருத்தவரை முழுக்க முழுக்க அவரது ''கிருபையால்'' நமக்கு அருளப்படுவது; நம்மைப் பொருத்த வரை முழுக்க முழுக்க நமது ''விசுவாசத்தினால்'' பெற்றுக் கொள்ளப்படுவது (இது லத்தீன் மொழியில் *"Sola Gratia"* என்றும் *"Sola Fide"* என்றும் முறையே சொல்லப்படும்.)

திருச்சபை நமக்கு மீட்பு அருளாது. திருப்பலியோ, காணிக் கைகளோ, தானதர்மமோ நம்மை மீட்க முடியாது. நாம் கிறிஸ்து வானவர்மீது நம்பிக்கை வைத்து, அவரை மட்டும் விசுவாசித் தால், அவர் மட்டுமே நமக்கு மீட்பு அருள முடியும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக மட்டுமே பாவ மன்னிப்பு (1 யோவான் 1:7ஆ; எபேசியர் 1:7). இப்பொழுதே கடவுளை நோக்கி, ''கடவுளே, பாவியாகிய என் மீது இரங்கியருளும்'' என்று கதறுங்கள் (லூக்கா 18:13). கிறிஸ்துவானவர் உங்களுக் காய்க் கல்வாரிச் சிலுவையில் உயிர் கொடுத்து, மூன்றாம் நாள் கடவுளுடைய வல்லமையினால் உயிர்த்தெழுந்தார் என்று உள் ளூர நம்புங்கள் (உரோமையர் 10:9,10). முழு நம்பிக்கையுடன் அவரை உங்கள் சொந்த மீட்பராய் ஏற்றுக்கொள்ளுங்கள். ''கிறிஸ்துவிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளிக்கிறார்'' (யோவான் 1:12).

இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே இணைப்பாளர் அல்லது நடுவர் (Mediator) கிறிஸ்துவானவர் மட்டுமே (1 திமொத்தேயு 2:5,6). எனவேதான் நமது மன்றாட்டுகள் அனைத்திலும் தந்தையாம் இறைவனை நோக்கி, இயேசு கிறிஸ்துவின் திருப்பெயராலேயே, வேண்டிக்கொள்ளுகிறோம். பரிசுத்த தேவனுக்கும் பாவ மனிதனுக்கும் நடுவில் பாவியாகிய

இன்னொருவர், எவ்வளவு புனிதமாய் இருந்தாலும், நடுவராய் இருக்க முடியாதே. மரியன்னை அவர்கள் கடவுள் விரும்பிய நல்வாழ்வு வாழ்ந்தாலும், இறைமகன் இயேசுவைப்போல் பாவமற்றவர் அல்லவே. ''நானே வழி ... என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை'' என்று இயேசு கூறியுள் ளாரே (யோவான் 14:6). தம்மிடம் வருவதற்கு வேறு வழி யையோ, வேறு நடுவரையோ அவர் சுட்டிக்காட்டவில்லை. (லத்தீன்: *"Solo Christo")*. மகனிடம் அவரது தாயார் வழியாய்ச் செல்லலாம் என்ற எண்ணம் வெறும் மனித யூகம். அது கடவுள் வகுத்த முறை அல்ல. திருவிவிலியம் எங்கும் அவ்விதம் கற்பிக்கவில்லை.

நண்பரே, இன்றே மனம் திரும்பிக் கிறிஸ்துவானவரைப் பாவம் போக்கும் இரட்சகராக, மீட்பராக, ஏற்றுக்கொண்டால் மரியன்னையைப் போல நீங்களும் மாபெரும் மீட்பில் ''பேரு வகை'' கொள்ளலாம். நாம் இறப்பதற்கு முன்னரே மீட்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இறந்த பின்னர் யாருக்காவும் பிரார்த்தனை ஏறெடுக்கப்பட முடியாது. உத்தரிக்கும் ஸ்தலம் (purgatory) என்பது வெறும் கற்பனை. திருமறையில் அதற்கு ஆதாரம் இல்லை. ''இன்றே மீட்பு நாள்'' (2 கொரிந்தியர் 6:2). இயேசு விரைவில் வருகிறார் (திருவெளிப்பாடு 22:20).

2. இறைவார்த்தைக்கு அடிபணியுங்கள்.

''நான் ஆண்டவரின் அடிமை; உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்'' என்றார் கன்னி மரியா (லூக்கா 1:38). ''அடிமை'' என்ற சொல் ''பணிப்பெண்'' (handmaid) என்றும் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. கபிரியேல் எனும் வான தூதர் சொன்ன எல்லாவற்றையும் மரியம்மையால் ''புரிந்துகொள்ள'' முடியா விட்டாலும், அவர் கடவுளது வார்த்தையின் உன்னத அதிகா ரத்தை ஏற்றுக்கொண்டு அதற்குத் தன்னை அடிமை என்று அர்ப்பணித்தார்.

அனைத்திற்கும் மேலாகத் தமது பெயரையும், தமது வாக்கையும் கடவுள் மேன்மையுறச் செய்துள்ளார் (திருப்பாடல்கள் 138:2). "விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும்; ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா" என்றார் இயேசுவானவர் (மாற்கு 13:31). இறைவார்த்தைக்கு மேற்பட்ட அதிகாரம் எதுவுமில்லை. 66 புத்தகங்களைக் கொண்ட திருவிவிலியமே திருவார்த்தை எனப்படும். அதுவே கடவுளது குரல். கடவுளது வார்த்தை மாறுவதேயில்லை. எழுதப்பட்டுள்ள தமது வார்த்தைக்கு மாறுபாடாகக் கடவுள் பேசுவதுமில்லை. அது நித்தியமாய் நிலைத்திருக்கும். தமது வார்த்தையின்மேல் தனது வாழ்க்கையைக் கட்டுகிற மனிதன் ஆழமாய்த் தோண்டிப் பாறையின்மீது அஸ்திவாரம் போட்டுத் தனது வீட்டைக் கட்டும் அறிவாளிக்கு ஒப்பானவன் என்றார் இயேசு (மத்தேயு 7:24-28).

சத்தியத்திற்கும் அறிவிற்கும் திருத்தூதுவர்கள் (apostles) எப்பொழுதுமே திருவிவிலியத்தின் பக்கங்களையே திருப்பினர். "மறைநூலில் காணக்கிடக்கிறது" என்றும் "மறைநூலிலுள்ள எந்த இறைவாக்கும் எவரது சொந்த விளக்கத்திற்கும் உட்பட்டது அல்ல" என்றும் திருத்தூதுவர் பேதுரு அழுத்திக் கூறினார் (1 பேதுரு 2:6; 2 பேதுரு 1:20). "மறைநூல் கூறுவது என்ன?" என்று பவுலடியார் அடிக்கடி வினவினார் (உரோமையர் 4:3; 11:2; கலாத்தியர் 4:30). "மறைநூல் சொல்வது வீண் என்று நினைக்கிறீர்களா?" என்று திருத்தூதுவர் யாக்கோபு சவாலிட்டார் (யாக்கோபு 4:5). விடுதலை தரும் திருமறைச் சத்தியத்தை அறியாவிடில் குருட்டுப் பக்திதான் மிஞ்சும் (உரோமையர் 10:1-4).

திருச்சபையின் மரபுகள் அல்லது பாரம்பரியங்கள் (traditions) எவ்வளவு நல்லவையாய் இருந்தாலும் அவை மாறாத திருவார்த்தைக்கு நிகராகாது, மாற்றாகாது. "உங்கள் மரபின் பொருட்டுக் கடவுளின் வார்த்தையைப் பயனற்றதாக்கிவிடுகிறீர்கள்" என்று அக்காலத்து மார்க்கத் தலைவரை இயேசு கடிந்துகொண்டார் (மத்தேயு 15:6; மாற்கு 7:13). "உங்கள் மூதாதையரிடமிருந்து

வழி வழியாய் வந்த வீணான நடத்தையினின்று நீங்கள் விடு விக்கப்பட்டு ... உயிருள்ளதும், நிலைத்திருப்பதுமான, அழியா வித்தாகிய கடவுளின் வார்த்தையால் புதுப்பிறப்பு அடைந்துள் ளீர்கள்'' என்று திருத்தூதுவர் பேதுரு விளக்குகிறார் (1 பேதுரு 1:18,23). போப்பாண்டவரோ, புனிதர்களோ, பேராயரோ, திருச் சபையோ அல்ல, திருவிவிலியமே நமது வாழ்வில் முதலிடம் பெறவேண்டும். திருவசனத்திலிருந்துதான் திருச்சபை அதிகாரம் பெறுகிறது; மாறாக அல்ல. தொடக்கத்தில் இருந்தது திருவார்த்தை; திருச்சபை அல்ல! (யோவான் 1:1).

''திருவிவிலியம்'' என்பது ரோமன் கத்தோலிக்க வேத அறிஞரும், புராட்டடஸ்டன்டு வேத அறிஞரும், தமிழறிஞரது உதவியுடன் 1996இல் வெளியிட்ட பொதுவான மொழியாக்கம் ஆகும். (ஆங்கிலத்தில் Revised Standard Version பயன்படுத் தலாம்.) அதின் பிரதி ஒன்றை உடனே வாங்கி உங்களுக்குக் கடவுள் அளிக்கும் செய்தியை நீங்களாகவே தினமும் வாசியுங் கள். நீங்கள் கிறிஸ்துவானவரை உங்கள் மீட்பராக நம்பி ஏற்றுக் கொள்ளும்போது கடவுளின் பிள்ளைகளாவதால் கடவுளின் வித்து உங்களில் உள்ளது. அவர் தமது தூயாவியானவராகிய துணையாளரால் உங்களுக்குக் கற்பித்து அவரது திருவார்த்தை யால் உங்களைத் திருச்சத்தியங்கள் அனைத்திற்குள்ளும் நடத்து வார். திருமறைக்கு முரண்படும் எல்லாவற்றையும் அப்புறப் படுத்தி, திருமறையிலுள்ளவற்றை மட்டும் அணைத்துக்கொள் ளுங்கள். (லத்தீன்: *"Sola Scriptura")*. கடவுள் தமது வாக்கை மதிக்கிறவர்களை மதிக்கிறார். உங்கள் நண்பர் உங்களைக் கேலி செய்து அவமதிக்கலாம். அதைக் கேளாதவர்போல் இருந்து விடுங்கள். அலகை எனும் பிசாசானவன் திருவார்த்தைக்குப் பயப்படுகிறான். ஆகையால் அவன் உங்கள்மீது கோபப்படுவா னானால் ஆச்சரியப்படாதிருங்கள். முடிந்த அளவு திருவச னத்தை மனனம் செய்து, பிசாசானவன் உங்களைச் சோதிக்கும் போது அவனுக்கு எதிராகத் தகுந்த வசனங்களைப் பயன்படுத்

துங்கள். பாலை நிலத்தில் இயேசுவானவர் காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றுங்கள். ''மறைநூலில் எழுதியுள்ளதே'' என்று திரும்பத் திரும்பச் சொல்லியே பிசாசை இயேசு மடங்கடித்தார் (மத்தேயு 4:1-11). திருவார்த்தையின் மூலம்தான் நமக்குப் பாவத்தின்மீது வெற்றி கிட்டும் (திருப்பாடல்கள் 119:9,11).

கிறிஸ்தவ வாழ்வு என்றாலே தேவன்மீது விசுவாசமும் அவருக்குக் கீழ்ப்படிதலும்தான். இறைவாக்குகளை நம்பி இறைக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படியுங்கள். ''கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில்தான் அவரது அன்பு அடங்கியுள்ளது; அவரது கட்டளைகள் நமக்குச் சுமையாயிருப்பதில்லை'' என்றெழுதினார் திருத்தூதுவர் யோவான் (1 யோவான் 5:3). திருவிவிலியத்தின் இரண்டாம் பகுதியாகிய ''புதிய ஏற்பாடு'' என்பதைக் கவனமாய் வாசித்துக் கிறிஸ்துவானவரின் கட்டளைகளை அடிக்கோடிடுங்கள். அவரது அருளினாலும் அவர் தரும் ஆற்றலினாலும் ஒவ்வொன்றிற்காய்க் கீழ்ப்படியத் தொடங்குங்கள். கிறிஸ்துவானவரின் ஓர் அடிப்படைக் கட்டளை தண்ணீரில் திருமுழுக்கு (baptism) பெறவேண்டும் என்பது (மத்தேயு 28:19; மாற்கு 16:16). முக்கிய திருத்தூதுவரில் ஒருவராகிய பேதுருவும் இதையே சொன்னார்: ''நீங்கள் மனம் மாறுங்கள் ... திருமுழுக்கு பெறுங்கள்'' (திருத்தூதர் பணிகள் 2:38). நீங்கள் மனந்திரும்பிக் கிறிஸ்துவை விசுவாசிக்கும் முன்னர் நிறைவேற்றிய எந்தச் சடங்கும் திருவிவிலியத்தின்படி திருமுழுக்கு என ஏற்புடையதல்ல. மனம் மாறிய பின்னர் திருமுழுக்கு பெறவேண்டும் என்பதே வேத ஒழுங்கு. கிறிஸ்துவை இரட்சகராய் விசுவாசியுங்கள்; அதற்குப் பின்னர் திருமுழுக்கு பெறுங்கள். கடவுள் நியமித்துள்ள இந்த வரிசையை மாற்றுவதற்கு மனிதர் எவருக்கும் அதிகாரம் கிடையாது. எனவே பிரியமானவரே, தூயாவியானவரின் நிறைவைப் பெற்றுள்ள இறைப்பணியாளர் ஒருவரிடம் சென்று அவரிடம் தண்ணீரில் திருமுழுக்கு பெற்று இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுங்கள்.

மரியன்னை தன்னைத் தன்னார்வ அடிமையாகக் கடவுளது வார்த்தையின் அதிகாரத்திற்கு அர்ப்பணித்தபோது, கடவுள் அவரை மனுக்குலத்திற்கு மாபெரும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும் பாத்திரமாக மாற்றினார். அவ்விதமே, நமது மூதாதைய ராகிய ஆபிரகாமும் இறைவார்த்தையை நம்பி இறைவனுக்குக் கீழ்ப்படிந்தபோது, அவர் ஆசீர்வதிக்கப்பட்டு உலகிலுள்ள அனைத்து இனத்தவர்களுக்கும் ஆசீர்வாத வாய்க்கால் ஆனார். இவ்வித முன்மாதிரிகளையே நாம் பின்பற்றவேண்டும். கானா என்ற ஊரில் நடந்த திருமணத்தில் திராட்சை இரசம் தட்டுப் பாடானபோது, வேலைக்காரரிடம் இயேசுவின் தாயார் சொன்ன வார்த்தைகளை நமதாக்குவோம்: ''அவர் உங்களுக்குச் சொல்வ தெல்லாம் செய்யுங்கள்'' (யோவான் 2:5).

3. தூயாவியால் நிரப்பப்படுங்கள்.

கன்னி மரியா மீது தூயாவியானவர் வந்து, உன்னதமானவரின் வல்லமை அவர் மீது நிழலிட்டபோது, அவர் கருவுற்றார் (லூக்கா 1:35). இந்த ஆசீர்வாதமான அனுபவத்திற்கு இணையில்லை. ஆனாலும், இயேசுவானவர் தமது சீடரிடம் பரிசுத்த ஆவியை அவரது அபிஷேக வல்லமையோடு பெற்றுக்கொள்வதற்காக எதிர்பார்த்துக் காத்திருக்கக் கட்டளையிட்டபோது, தாழ்மையும் கீழ்ப்படிதலுமுள்ள 120 சீடர்களோடு ஒருவராக மரியன்னையும் எருசலேமில் காத்திருந்தார் (திருத்தூதர் பணிகள் 1:14). மற்ற சீடர்களோடு மரியாவும் பரிசுத்த ஆவியானவரது அபிஷேகம் பெற்று நவநாவுகளில் பேசிக் கடவுளின் அரும்பெரும் செயல் களைப் புகழ்ந்து துதித்தார் (2:4,11). கிறிஸ்துவுக்காய்ச் சான்று பகர்வதற்கு மரியம்மாளுக்கும் தூயாவியானவரின் வல்லமை தேவையாயிருந்தது (1:8). போற்றப்படும் திரித்துவத்தின் மூன்றாம் நபராகிய தூயாவியானவரது வல்லமை மரியன்னைக் கும் அத்தியாவசியப்பட்டது.

பெந்தக்கோஸ்து எனும் நாளில் சீடர்மீது பரிசுத்த ஆவியான வர் அற்புதமாய் இறங்கியதைக் கண்டு வியந்த திரள் கூட்டமான யூதர்கள் பேதுருவையும் மற்ற திருத்தூதுவர்களையும் பார்த்து, "நாங்கள் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டபோது, அவர்கள் மனந்திரும்பித் திருமுழுக்கு பெற்றுக்கொண்டால் தூய ஆவியைக் கொடையாய் பெற்றுக்கொள்வார்கள் என்று உடன டியாய்ப் பேதுரு பதில் உரைத்தார். மட்டுமல்ல, "இந்த வாக்கு றுதியானது உங்களுக்கும் உங்களது பிள்ளைகளுக்கும் தொலை விலுள்ள யாவருக்கும், ஆண்டவராகிய கடவுள் தம்மிடம் அழைக்கும் அனைவருக்கும் உரியது" என்றும் சொன்னார் (திருத்தூதர் பணிகள் 2:37-39). ஆம், பிரிய நண்பரே, நீங்களும் தேவனுடைய பிள்ளையாகும்படி அழைக்கப்பட்டிருப்பதால் தூயாவியானவரைக் குறித்த அருள்வாக்கை நீங்களும் உரிமை கொண்டாடலாம்.

பின்வரும் முக்கியக் காரணங்களுக்காய்த் தூயாவியானவரின் வல்லமை நமது வாழ்வில் கட்டாயம் தேவை: (அ) அவரது பெயருக்கேற்பப் "பரிசுத்த" ஆவியானவர் நம்மைப் பரிசுத்தப் படுத்துகிறார். பிசாசானவனின் பாவச் சோதனைகளை நாம் மேற்கொள்வதற்குத் தேவையான பலத்தை அவர் அருளுகிறார். உயர் பண்புகளாகிய அவரது கனிகள் நம்மில் வெளிப்படச் செய்கிறார் (கலாத்தியர் 5:22,23). படிப்படியாய் நம்மைக் கிறிஸ்துவின் சாயலாக மாற்றுகிறார் (2 கொரிந்தியர் 3:18). (ஆ) தூயாவியானவரே திருமறையின் ஆக்கியோன் (2 பேதுரு 1:20,21). அவரே திருச்சத்தியங்கள் அனைத்தையும் நமக்குக் கற்றுத் தருகிறார். கடவுளுடைய ஆழ்ந்த காரியங்களை அறியும் படி நமது அகக்கண்களைத் திறக்கிறார். இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை நமக்கு நினைவுபடுத்துகிறார் (யோவான் 14:26). நோக்திற்குத் தகுந்த இறைவார்த்தை! (இ) ஜெபம் பண்ணுவதற்குப் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார். எவ்விதமாய் ஜெபிக்க வேண்டும் என்று நமக்குச்

சரியாய்த் தெரியாது. ஆவியானவரே நமக்குள்ளிருந்து வேண்டுதல் செய்கிறார் (உரோமையர் 8:26,27). கிறிஸ்துவானவர் நம்மோடு இருப்பதை நிசமாகவே நம்மை உணரச்செய்கிறார். **(ஈ)** பரிசுத்த ஆவியானவரே நமது துணையாளர் (யோவான் 14:16). கவலைகள், இன்னல்கள், கலக்கங்கள் வழியாய் நாம் செல்லும்போது அவரே நம்மை உற்சாகப்படுத்தி நமக்கு ஊக்கமளிக்கிறார். சாவுக்குரிய நமது உடல்களுக்குத் தெம்பளிக்கிறார் (உரோமையர் 8:11). **(உ)** இறைச்சித்தத்தை நாம் அறியவும், நாம் நடக்கவேண்டிய வழியை அறிந்துகொள்ளவும் தூயாவியானவர் நமக்கு உதவுகிறார் (8:14). **(ஊ)** கிறிஸ்துவின் நற்செய்தியைப் பிறர்க்கு எடுத்துரைக்க தூயாவியானவர் நமக்குத் தைரியம் தருகிறார் (திருத்தூதர் பணிகள் 1:8). சக மனிதருக்கு நாம் ஆசீர்வாதமாயிருக்க ஆவியானவர் நமக்குப் பல்வேறு ஏதுக்களை அருட்கொடைகளாய் அருளுகிறார் (1 கொரிந்தியர் 12:7-11). **(எ)** நாம் இறைமக்கள் என்பதை அவ்வப்போது தூயாவியானவர் நமக்கு நினைவுபடுத்துகிறார் (உரோமையர் 8:16). நமது வாழ்வில் எது நடந்தாலும் அது நன்மைக்காகவே என்ற மனவுறுதியை ஆவியானவர் நமது இருதயத்தில் பதிக்கிறார் (8:28). என்னே ஆசீர்வாதங்கள்!

தூயாவியானவரை நாம் பெற்றுக்கொள்வது எவ்விதம்? கிறிஸ்துவின் திருரத்தத்தால் நீங்கள் கழுவப்பட்டிருக்கிறீர்களா என்றும், நீங்கள் கடவுளுடைய பிள்ளையாயிருக்கிறீர்களா என்றும் நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள். சிறு பிள்ளை போன்ற எளிய விசுவாசத்தோடும், உண்மையான பசி தாகத்தோடும் ஆண்டவரிடம் வேண்டுங்கள். ''பசித்தோரை ஆண்டவர் நலன்களால் நிரப்பியுள்ளார்; செல்வரை (அதாவது, தங்களுக்கு ஒன்றும் தேவையில்லை என்று நினைப்போரை) வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்'' என்று மரியன்னை பாடினார் (லூக்கா 1:53). கடவுள் தமது வாக்குப்படி உங்களைத் தூயாவியால் நிரப்பும்படிக் கேளுங்கள். இதோ, கிறிஸ்துவானவர்

கொடுக்கும் அருள்வாக்கு: ''தீயோராகிய நீங்களே உங்கள் பிள்ளைகளுக்கு நற்கொடைகள் அளிக்க அறிந்திருக்கிறீர்கள்; அப்படியானால் விண்ணகத் தந்தை தம்மிடம் கேட்போருக்குத் தூய ஆவியைக் கொடுப்பது எத்துணை உறுதி!'' (லூக்கா 11:13). ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுள்ளோரோடு கூடி ஜெபிப்பது உதவியாயிருக்கும்.

4. கடவுளை உண்மையாய் உள்ளத்தில் வழிபடுங்கள்.

''ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்து கின்றது'' என்றார் மரியா (லூக்கா 1:46). கடவுளின் கிருபை, இரக்கம், வலிமை மற்றும் உண்மை போன்ற மாட்சிமையான பண்புகளுக்காய்க் கர்த்தரை மரியா தொழுதுகொண்டார். லூக்கா நற்செய்தி நூலில் முதலாம் அத்தியாயம், 46ஆம் வசனம் முதல் 55ஆம் வசனம் வரையுள்ள மரியாவின் பாடல் முழுவதும் தொழுகையும் போற்றுதலும் நிறைந்தது. அவர் கடவுளைத் தனது ''ஆவியில்'' ஆராதித்தார் (வசனம் 47).

கடவுளுக்கு ஏற்புடைய தொழுகையைக் குறித்து இயேசு வானவர் நமக்குத் தெள்ளத் தெளியக் கற்பித்திருக்கிறார்: ''கடவுள் (உருவமற்று) ஆவியாயிருக்கிறார்; அவரை வழிபடு வோர் அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில்தான் வழிபடவேண்டும்'' (யோவான் 4:24). எவ்விதச் சிலை வழிபா டும் பாவமாகும். ஏனெனில் அது கடவுளுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியாமை ஆகும். பல்வேறு இனத்தவர்மீதும் இஸ்ரயேலர் மீதும் கடவுளின் கோபமான தண்டனைத்தீர்ப்பு அளிக்கப்பட்ட தற்கு ஒரு முக்கிய காரணம் அவர்களது சிலை வழிபாடுதான் என்று திருமறையில் காண்கிறோம் (உரோமையர் 1:23,25). சிலை வழிபாடு மலிந்துள்ள பாரதத்தில், உருவமற்று, உயி ரோடு, ஆவியாயிருக்கும் கடவுளுக்குச் சான்றாய் இருக்கவேண் டியது கிறிஸ்தவர்களின் பொறுப்பு (1 தெசலோனிக்கர் 1:9).

இயேசுவின் அல்லது மரியாவின் அல்லது புனிதர்களின் உருவச் சிலைகள், சொரூபங்கள் அல்லது சிலுவைச் சின்னத்தை வணங்குவதில் தவறேதுமில்லை என்று சொல்லிப் பிசாசான வன் ஆண்டாண்டு காலமாய்க் கிறிஸ்தவர்களை ஏமாற்றி வந்திருக்கிறான். ஆனால் பத்துக் கட்டளைகளில் இரண்டாம் கட்டளையின் தெளிவை உற்று நோக்குங்கள்: ''மேலே விண் வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ, ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக்கொள்ளமாட்டேன்; என்னைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள் மேல் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் தண்டித்துத் தீர்ப்பேன்'' (விடுதலைப் பயணம் 20:4,5). ''யாதொன்று'' எனும் சொல் எதுவும் விதிவிலக்கு அல்ல என்பதை வலியுறுத்துகின்றது. இது தம்மைப் ''புறக்கணிப்ப தற்கு'' ஒப்பாயிருப்பதால் சிலை வழிபாட்டைப் ''பாவம்'' என்று கடவுள் தீர்க்கிறார். ஆவியாயிருக்கிற கடவுளைச் சித்திரமாக வரைதலோ, சிலையாக வடித்தலோ அவரது பெயருக்கு அவமரி யாதை! ஒருவரும் இயேசுவானவரைப் புகைப்படம் எடுத்தது இல்லை. இன்றையச் சித்திரங்கள், சிலைகள் எல்லாம் யூகமும் பாரம்பரியமுமே. ''ஆகவே இனிமேல் நாங்கள் எவரையும் மனு வுடலின்படி மதிப்பிடுவதில்லை; முன்பு நாங்கள் கிறிஸ்துவை யும் மனுவுடலின்படிதான் மதிப்பிட்டோம். ஆனால் இப்போது அவ்வாறு செய்வதில்லை ... பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ?'' என்றார் திருத்தூதுவர் பவுல் (2 கொரிந்தியர் 5:16,17).

திருப்பலி நடத்துதலும் அதில் பங்கேற்றலுமான பழக்கம் புதிய ஏற்பாட்டின் எளிய போதனைக்கு இன்னொரு முரண் பாடாகும். கிறிஸ்துவானவர் ஒரே ஒரு முறையாய் நம்மெல்லா

ருக்காகவும் சிலுவையில் அறையப்பட்டுவிட்டார். அந்தப் பலியை நாம் மறுபடியும் செய்யாமல் ஆன்மீக ரீதியில் மட்டும் அதை நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். இதைக் குறித்துத் திருவிவிலியத்தில் எபிரேயர் நிருப ஆக்கியோன் கூறுவதைக் கவனித்துக் கேளுங்கள்: ''இயேசு கிறிஸ்து ஒரே ஒரு முறை தம் உடலைப் பலியாகச் செலுத்தியதின் மூலம் நாம் தூயவராக்கப் பட்டிருக்கிறோம். ஒவ்வொரு குருவும் (பழைய ஏற்பாட்டுக் காலத்தில்) நாள்தோறும் இறை ஊழியம் புரியும்போது மீண்டும் மீண்டும் அதே பலியைச் செலுத்திவருகிறார். அவையோ பாவங் களை ஒருபோதும் போக்க இயலாதவை. ஆனால் இயேசுவோ ஒரே பலியைப் பாவங்களுக்காக என்றென்றைக்கும் எனச் செலுத்திவிட்டு, கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்துள்ளார் ... இது பற்றித் தூயாவியாரும் நமக்குச் சான்று பகர்கிறார்'' (எபிரேயர் 10:10-15).

திருவிருந்து (Lord's Supper) என்பது நன்றியுணர்வோடும் மகிழ்வோடும் ஆண்டவரை ''நினைவுகூருதல்'' (remembrance) மட்டுமே (1 கொரிந்தியர் 11:24). அப்பமும் ரசமும் கிறிஸ்து வின் உடலையும் இரத்தத்தையும் குறிக்கும் அடையாளங்கள் (symbols) அவ்வளவுதான். அவை புனிதப் பொருட்களாய் (sacraments) மாறுவதில்லை. ஜெபித்து ஆசீர்வதிக்கப்பட்ட பின்னரும் அவை வெறுமனே அப்பமும் ரசமுமாகவே இருக் கின்றன. அவை இயேசுவின் சதையாகவும் இரத்தமாகவும் மாறி விடுகின்றன (transubstantiation) என்று கூறுவது அபத்தம். இயேசுவின் சதையும் இரத்தமும் அப்பத்திலும் ரசத்திலும் கலந்து விடுகின்றன (consubstantiation) என்ற சிலரது நம்பிக்கையும் திருமறைக்கு ஒவ்வாதது. மட்டுமல்ல, கிறிஸ்துவை விசுவாசிக் கும் அனைவரும் ''தூய குருக்களின் கூட்டமாகவும், அரச குருக்களின் கூட்டத்தினராகவும்'' (Holy and Royal Priests) இருக்கின்றனர் என்று திருத்தூதுவர் பேதுரு அழுத்தம் திருத்த மாய்க் கூறியுள்ளார் (1 பேதுரு 2:5,9). வித்தியாசமே இல்லை.

புதிய ஏற்பாட்டுச் சபையில் பலிபீடமும் (altar) கிடையாது. புதிய உடன்படிக்கையின்படி யாவும் மாட்சிமையான ஆன்மீகக் காரியங்களே! நிசம் வந்தபின் நிழல் ஏன்? ரோமன் கத்தோலிக்கர் மற்றும் புராட்டஸ்டன்ட்ஸ் ஆகிய இரு பிரிவினரும் இக்காரியங் களில் திருவிவிலியத்தின்படிச் சீர்திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் விட்டுவிடவேண்டிய இன்னொரு காரியம் மரி யன்னையைத் தொழுதல். மரியன்னை தெய்வ பக்தி உள்ளவர், தெய்வீகம் (divinity) உள்ளவர் அல்ல. அவரது தன்மை முழுக்க முழுக்க மானிடமே (humanity). அவர்மீது இறங்கிய ஆசீர்வாதம் கடவுள் தமது சுத்தக் கிருபையினாலும் இரக்கத்தினாலும் அருளிய ஈவே. அவருடைய ஆசீர்வாதத்தின் இரகசியம் கடவுள் அவரோடு இருந்ததே (லூக்கா 1:28,30). விண்ணிலிருந்து அவருக்குள் வந்த இறைவன்மையினாலேயே இயேசுவைக் கன்னி மரியா கருத்தரித்தார். அதாவது தூயாவியானவரின் வல்லமை அவர்மீது வந்திறங்கியது (லூக்கா 1:35). மரியாவால் யாரையும் மீட்க முடியாது. தனது சொந்த மீட்பிற்காகவே அவர் கடவுளை நோக்கிப் பார்க்கவேண்டியிருந்ததே. கிறிஸ்துவுடன் கூட யாருமே மீட்பின் வல்லமையைப் பங்குபோட முடியாதா கையால், மரியாவை வணங்குபவர்கள் கிறிஸ்துவின் சிலுவைச் செய்திக்கு எதிராகிறார்கள். சிலுவையுடன் எதையும் கூட்ட முடியாது (கலாத்தியர் 6:14). கிறிஸ்து பிறப்பின்போது கிழக்கி லிருந்து வந்த ஞானிகள் செய்ததுதான் சரி. அவர்கள் குழந்தை இயேசுவையும் அவரது தாயாகிய மரியாவையும் கண்டு, நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து ''குழந்தையைத்தான்'' வணங் கினார்கள் (மத்தேயு 2:11). அவர்கள் கொண்டுவந்த ''பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம்'' ஆகிய மூன்று பொருட்களை யும் ''குழந்தைக்கே'' காணிக்கையாகக் கொடுத்தார்கள் — ஒன்றை மரியாவுக்கும், ஒன்றை யோசேப்புக்கும், ஒன்றைக் குழந்தை இயேசுவுக்கும் அல்ல! அன்னை மரியாவைக் குறித்த

உபதேசங்கள் (Mariology) திருவிவிலியத்தைச் சார்ந்து எழுதப் பட்டவை அல்ல. அவை முழுக்க முழுக்க மனிதனின் கற் பனைப் படைப்பு. ''ஒரு பாதை மனிதருக்கு நல்வழி போலத் தோன்றலாம்; முடிவிலோ அது சாவுக்கு நடத்தும் பாதை யாகிவிடும்'' என்ற திருவார்த்தையை நினைவிற்கொள்ளுங்கள் (நீதிமொழிகள் 14:12).

5. விசுவாசிகளின் ஐக்கியத்தில் சேர்ந்துகொள்ளுங்கள்.

ஒரு நாள் இயேசுவின் சகோதரரும் அவரது தாயாரும் வந்து அவர் இருந்த வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டு ஆள் அனுப்பி அவரைக் கூப்பிட்டார்கள். அவரைச் சுற்றி உட்கார்ந் திருந்தோர் அவரைப் பார்த்து, ''அதோ, உம் தாயும் சகோதரர் களும் சகோதரிகளும் வெளியே நின்றுகொண்டு உம்மைத் தேடுகிறார்கள்'' என்றனர். அவர் அவர்களைப் பார்த்து, ''என் தாயும் என் சகோதரர்களும் யார்?'' என்று கேட்டு, தம்மைச் சூழ்ந்து அமர்ந்திருந்தவர்களைச் சுற்றிலும் பார்த்து, ''இதோ! என் தாயும் என் சகோதரர்களும் இவர்களே. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்'' என்றார் (மாற்கு 3:31-35).

''வெளியே வரும்படி அழைக்கப்பட்டவர்கள்'' (called out) என்று பொருள்படும் ''எக்ளீசியா'' (Ecclesia) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்ததே ''சபை'' (Church) எனும் வார்த்தை யாகும். ஆம், உயிருள்ள கடவுளைத் தொழுதுகொள்ளவும், அவ ரது சித்தத்தைச் செய்யவும், சிலை வழிபாடும் ஒழுக்கக்கேடும் நிறைந்த இவ்வுலகிலிருந்து வெளியே அழைக்கப்பட்டோரின் குழு அல்லது கூடுகையே திருச்சபை ஆகும். அது கடவுளு டைய குடும்பம். ஏனெனில் அதின் உறுப்பினர்கள் முன்பு சாத்தானின் பிள்ளைகளாயிருந்து, இப்பொழுது கடவுளின் பிள்ளைகளானவர்கள். அவர்கள் மறுபடியும் பிறந்து தூயாவி யானவராலே கிறிஸ்துவின் உடலாம் திருச்சபையில் அங்கங்

களாக்கப்பட்டவர்கள். பிரியமானவரே, கடவுளின் தெளிவான கட்டளையைக் கவனியுங்கள்: ''நம்பிக்கை கொண்டிராதவரோடு உங்களைப் பிணைத்துக்கொள்ள வேண்டாம். இறைவனுக்கு ஏற்புடைய நெறிக்கு, நெறிகேட்டோடு என்ன உறவு? ஒளிக்கு இருளோடு என்ன பங்கு? கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் என்ன உடன்பாடு? நம்பிக்கை கொண்டோர்க்கு நம்பிக்கை கொண்டிராதவரோடு என்ன தொடர்பு? கடவுளின் கோவிலுக்கும் சிலை வழிபாட்டுக் கோவிலுக்கும் என்ன இணக்கம்? வாழும் கடவுளின் கோவில் நாமே ... எனவே, 'அவர்கள் நடுவிலிருந்து வெளியேறுங்கள்; அவர்களை விட்டுப் பிரிந்து செல்லுங்கள்' என்கிறார் ஆண்டவர். 'அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொள்வேன். மேலும் நான் உங்களுக்குத் தந்தையாயிருப்பேன்; நீங்கள் எனக்குப் புதல்வரும் புதல்வியருமாயிருப்பீர்கள்' என்கிறார் எல்லாம் வல்ல ஆண்டவர்'' (2 கொரிந்தியர் 6:14-18). தூயாவியானவரது உறைவிடமாகிய இறைமக்களே இன்று கடவுளின் கோவில்; கட்டிடங்கள் அல்ல (எபேசியர் 2:19-22). கிறிஸ்துவுக்குப் பின்னுள்ள இந்தப் புதிய உடன்பாட்டுக் காலத்தில் புனிதத்தலம் என்று எதுவும் கிடையாது (திருத்தூதர் பணிகள் 7:47-50).

சிலைகளுக்கு டாடா சொல்லிவிடுங்கள். திருவிவிலியத்தில் உள்ள புதிய ஏற்பாட்டின் எளிய போதனைகளைப் பின்பற்றி, அன்புடன் செயல்படும் விசுவாசிகளுடன் ஐக்கியம் கொள்ளுங்கள். இச்செயலுக்காய் உங்கள் உறவினரும் நண்பரும் உங்களைப் புறக்கணிக்கலாம். ஆனால் இயேசுவின் வார்த்தைகளை நினைத்துக்கொள்ளுங்கள்: ''நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில்

உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். இவ்வாறே உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்களையும் அவர்கள் துன்புறுத்தினார்கள்'' (மத்தேயு 5:10-12). ***"விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்!"*** என்று முழக்கமிட்டு, திருவிவிலியத் திற்குப் புறம்பான அதிகாரத்திற்கு அடிபணிய மறுத்து, கலப் படமற்ற நற்செய்திக்காய் நின்றதினால் ஆயிரக்கணக்கான விசுவாசிகள் சிந்திய இரத்தத்தின் கறை திருச்சபைச் சரித்திரத் தில் நிறையவுண்டு (அபகூக்கு 2:4; கலாத்தியர் 3:11; உரோ மையர் 1:17; எபிரேயர் 10:38).

நீங்கள் பெற்றுக்கொண்ட விலையுயர்ந்த இந்த விசுவாசத் தையும், மகிழ்ச்சியையும் பிறரோடு பகிர்ந்துகொள்ளாமல் மறைத்து வைக்காதீர்கள். மரியன்னையோ சூசையப்பரோ இயேசுவைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இயேசு தம் பெற்றோரிடம், ''நான் என் தந்தையின் அலுவல் களில் ஈடுபட்டிருக்கவேண்டும் என்பது உங்களுக்குத் தெரி யாதா?'' என்று சொன்னதினால் கடவுளுக்கும் அவருடைய அரசிற்கும் கிறிஸ்து தமது வாழ்வில் முதலிடம் கொடுத்திருந்தார் என்று அறிகிறோம் (லூக்கா 2:49,50). இயேசுவுக்காய்ச் சான்று பகரவேண்டும் என்று சொல்வதினால் நீங்கள் ஒரு மேடைப் பிரசங்கியாராகவோ, முழுநேர இறைப்பணியாளராகவோ மாறி விடவேண்டுமென்று பொருளல்ல. நீங்கள் ஒரு மாணவனா னால் உங்களது உடன் மாணவரை இயேசுவிடம் கொண்டுவர முயலுங்கள். நீங்கள் ஒரு வியாபாரியானால் வணிகத்துறை யிலுள்ளவர்களைக் கிறிஸ்துவிடம் வழிநடத்துங்கள். கிறிஸ்து இல்லாத எவனும் தொலைந்துபோனவன் — நித்திய நித்திய மாய்! உயிர் தரும் ஊற்றிடம் அவர்களை வழிநடத்த உங்களது பொறுப்பும் பாக்கியமும்தான் என்னே! ''யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்'' எனச் செயல்படுங்கள். உங்கள் வார்த்தை யினாலும் வாழ்க்கையினாலும் மக்கள் கடவுளைப் போற்றிப்

புகழட்டும் (மத்தேயு 5:16; 1 கொரிந்தியர் 10:31). எதைச் செய்தாலும் கடவுளின் மகிமைக்காவே செய்யுங்கள் (லத்தீன்: *"Soli Deo Gloria")*.

அனுதின ஜெபமும், திருவிவிலியத் தியானமும் உங்கள் ஆன்மாவிற்கு ஆகாரமாகும்; கிறிஸ்துவுக்காய்ச் சான்று பகருதலோ உங்கள் ஆன்மாவுக்கு உடற்பயிற்சி போன்றது. கிறிஸ்துவைப்பற்றிப் பிறர்க்கு அறிவிக்க அறிவிக்க திடமாய் ஆன்மீக வாழ்வில் வளருவீர்கள். மக்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருவோரின் ஆனந்தத்திற்கு நிகரேயில்லை. விண்ணகத்தில் உங்களுக்கு அரும் பரிசுகள் காத்திருக்கும். தானியேல் 12:3இிலுள்ள இறைவாக்கு உங்களுக்கே உரியது: ''ஞானிகள் வானத்தின் பேரொளியைப் போலவும், பலரை நல்வழிக்குக் கொணர்ந்தவர் விண்மீன்களைப் போலவும், என்றென்றும் முடிவில்லாக் காலத்திற்கும் ஒளி வீசித் திகழ்வர்!''

வாருங்கள், சேர்ந்து முழங்குவோம்!

- ☐ திருவிவிலியம் மட்டுமே! *(Sola Scriptura)*
- ☐ விசுவாசம் மட்டுமே! *(Sola Fide)*
- ☐ கிருபை மட்டுமே! *(Sola Gratia)*
- ☐ கிறிஸ்து மட்டுமே! *(Solo Christo)*
- ☐ தேவ மகிமை மட்டுமே! *(Soli Deo Gloria)*

இப்பிரசுரத்தை வாசிக்கும் ஒவ்வொருவரையும் கடவுள் தமது மீட்பினால் அலங்கரிக்க வேண்டும் என்பதே எனது பிரார்த்தனை!

— R. ஸ்டான்லி (1947-)
(திருமறைப் போதகராய் மாறிய
ஒரு கட்டிடப் பொறியியலர்)
<stanleyonbible@gmail.com>

மரியாவின் பாடல்

“ஆண்டவரை எனது உள்ளம்
போற்றிப் பெருமைப்படுத்துகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைத்து
எனது மனம் பேருவகை கொள்கின்றது.
ஏனெனில் அவர் தமது அடிமையின்
தாழ்நிலையைக் கண்ணோக்கினார்.
இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும்
என்னைப் பேறுபெற்றவர் என்பர்.
ஏனெனில் வல்லவராம் கடவுள்
எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார்.
தூயவர் என்பதே அவரது பெயர்.
அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை
தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்.
அவர் தமது தோள் வலிமையைக் காட்டியுள்ளார்;
உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச்
சிதறடித்து வருகிறார்.
வலியோரை அரியணையிலிருந்து தூக்கி எறிந்துள்ளார்;
தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்.
பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார்;
செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்.”

(லூக்கா 1:46-55, திருவிவிலியம்)